# திருமலைத்தீபம்

## THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 12
விலை 20/=

தை இதழ்~2015 ,ஆரம்பம் 15மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல:297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~12

E-mail- catetcota@gmail.com    T.P- 026 2221022, 0263202532


## மலரும் புதுவருடம் மனங்களில் மகிழ்வு தரும்

## Happy New year 2015



## மறைமாவட்ட ஆயரின் புதுவருடச் செய்தி

உலக அமைதி ஆண்டிலே, மலரும் புதுவருடம் மக்களின் மனங்களுக்கு மகிழ்வையும், ஆறுதலையும், தோற்றுவித்து நாட்டிற்கு அமைதியும் சமாதானமும் நிறைவாய்ப் பெருகிவர வாழ்த்துகின்றேன். வருடத்தின் முதல் நாளிலே இறைவனின் அன்னையாம் புனிதமரியாளின் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அன்னையின் ஆசீரும் வழிகாட்டலும் நம் ஒவ்வொருவரையும் கண்டடைய வேண்டி நிற்போம்.

மேலும் நாட்டிலே சமயரீதியான நிகழ்வுகளிலே நம்மைப் பொறுத்தவரையில் திருத்தந்தையின் இலங்கைக்கான வருகையையும் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் புனிதப்பட்ட நிகழ்வையும் முதன்மைப்படுத்திக் கூறலாம்.

பொதுவான நிகழ்வுகளை நோக்கும் போது ஜனாதிபதிதேர்தலைக் கூற வேண்டும். பொது வேட்பாளர் ஒருபுறம், தற்போதைய ஜனாதிபதி இன்னொரு புறம் இரண்டு பகுதியினருக்குமிடையே அதிகாரத்தை யார் பெறுவது என்பதில் நடைபெறும் கருத்துப்பரிமாற்றங்கள், சொற்போர்கள், பிரசார வேகங்கள் என்பன நாளுக்கு நாள் உயர்ந்து பெருகி விரிவடைந்து சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையிலே தேர்தல் முடிவுற்று ஐந்து நாள் இடைவெளியில் திருத்தந்தையின் வருகை இடம்பெற உள்ளது. தேர்தல் வெற்றி - தோல்வி இழப்பு இதனிடையே எப்படியான நிலைகளை நாங்கள் எதிர் கொள்ள வேண்டும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

திருத்தந்தையின் வருகையும் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் புனிதப்பட்ட நிகழ்வும் குறைகளோ தடைகளோ இன்றி நிறைவேற இறைவனை வேண்டி நிற்போம்.

வேதகலாபனை நெருக்கடி வேளைகளில் தான் கொண்ட நம்பிக்கையில் தளர்வின்றி வாழ்ந்து வெற்றி கண்ட அருளாளர் நமது பணிகளிலும் துணைபுரிய வேண்டுவோம்.

இவ் வருடத்தின் தொனிப் பொருளாக **"புதிய மறைபரப்புபணி வழியாக துறவற வாழ்வையும் குடும்ப வாழ்வையும் புதுப்பித்தல்"** என்பதைத் தருகின்றோம். திருத்தந்தை அவர்கள் "புதியமுறை நற்செய்தி அறிவிப்புப் பணியை வலியுறுத்தி நிற்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். அதே வேளை "குடும்பங்கள் வழியாக நற்செய்திப் பணி" என்னும் கருத்தையும் முதன்மைப்படுத்தி இருப்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். இந் நேரத்திலே இந்த ஆண்டினை துறவற வாழ்வின் ஆண்டாகவும் திருத்தந்தை பிரகடனப்படுத்தி உள்ளார்.

நாம் அனைவருமே நற்செய்திப் பணிக்காக அழைக்கப்பட்டிருக்கின்றோம் "கடவுளால் விரும்பப்பட்ட உறவுகளின் தளமே குடும்பம்" என்பதை நினைவில் கொள்ளுவோம். குடும்பங்களில் இறை வார்த்தைகளை வாசிப்பதும், அதனை வாழ்வோடு இணைத்து வாழ்வாக்குவதும் நற்செய்திப் பணிக்கு உரமூட்டும் செயல்களாக மாறுவதும் குடும்பங்களே.

எனவே நற்செய்திப் பணியின் தொடக்க நிலையாகவும்,துறவற வாழ்வுக்கு மூல காரணமாகவும் விளங்குவது குடும்பங்கள் என்றே கூறுகின்றேன்.

எனவே இப்புதிய ஆண்டிலே அனைத்துக் குடும்பங்களுக்கும் நல்ஆசீர் கூறிக்கொண்டு, பொங்கல் திருவிழாவைக் கொண்டாடும் இந்து சகோதரர்களுக்கும் வாழ்த்துக்கள் கூறிக்கொள்கின்றேன்.

இப்புதிய ஆண்டிலே அனைவரும் அமைதியுடன், ஆறுதலாகவும் அன்புடன் ஒன்றித்திருக்க வேண்டுகின்றேன்.

**அதி.வந். கலாநிதி
ஜோசப் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை
திருமலை மறைமாநில ஆயர்**



## திருத்தந்தையின் வரவினால் நம் மண்ணிலே அமைதி மலரட்டும்

## மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு



தொடர்ச்சி 04ம் பக்கம்

## வாழ்த்துகின்றோம்



பிறந்த நாளைக் கொண்டாடும் ஆயரின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

## புதுவருட நல்வாழ்த்துக்கள்

வாசகர்கள் , அன்பர்கள் , வாடிக்கையாளர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் திருமலைத் தீபத்தின் புதுவருட நல் வாழ்த்துக்கள்

**Happy New year**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக் 1:37)

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

மீண்டும் உங்களோடு பேசுகின்றேன்..
"புத்தாண்டே வரவேண்டும்"
"புதுப் பொலிவைத் தரவேண்டும்" என புது வருடத்தை வாழ்த்திக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுகின்றேன்

பிறக்கும் புதுவருடம் பல முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கி இருக்கின்றது. புது வருடத்திலே முதலாம் திகதி இறைவனின் அன்னையாம் மரியாளின் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். என்றும் அன்னையின் ஆசீரை வேண்டிநிற்போம்.

இதே மாதத்திலே இந்து சகோதரர்கள் பொங்கல் பெருவிழாவைக் கொண்டாடுகின்றார்கள். அவர்களுக்கும் எங்கள் நல் வாழ்த்துக்களைக் கூறுகின்றோம்.

நாட்டைப் பொறுத்தவரையில் ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. யாரை ஆதரிப்பது; யாருக்கு வாக்களிப்பது, யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் சிதறிப் பறந்த வண்ணம் இருக்கின்றன.

இதனிடையே கிறீஸ்தவர்களைப் பொறுத்தவரையில் பரிசுத்த பாப்பரசரின் வருகையும் முத்திப்பேறு பெற்ற யோசப் வாஸ் அடிகளாரின் புனிதப்பட்ட நிகழ்வும் முதன்மை இடங்களைப் பெற்று பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை தேர்தல் முடிவுற்று ஐந்து நாட்களின் பின்னர் திருத்தந்தையின் வரவு இடம்பெற உள்ளது. அதிவந்தனைக்குரிய கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் பாப்பரசரின் வருகை குறித்த செய்தியிலே "பாப்பரசரின் வருகையை அரசியலாக்க வேண்டாம்" என்பது குறிப்பிடப்பட்டிருந்தாலும் ஜனாதிபதியின் படத்துடன் சேர்த்துபாப்பரசரின் படத்தையும் இணைத்து விளம்பரப்படுத்தி இருந்தார்கள். சுவரொட்டிகளிலும் ஒட்டப்பட்டு இருக்கின்றன.

எப்படி இருந்தாலும் பாப்பரசரின் வருகையை ஆவலோடு எதிர்பார்துக் கொண்டிருந்த மக்களுக்கு தேர்தல் முடிவுற்று மிகக் குறைந்த நாட்களுக்குள் பாப்பரசரின் வருகை இடம்பெற இருப்பது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

வெற்றி பெற்றவர்களின் வெற்றிக்களிப்புக்கள் ஒருபுறம் தோற்றவர்களின் தாக்க நிலைகள் இன்னொரு புறமாக முழங்கும் போது அமைதியைக் காண முடியுமா? இந்த நிலையிலேயே மக்களின் பயணங்கள் பல கேள்விக் குறிகளாகவே உள்ளது.

இலங்கையின் புனிதராக புனிதப் பட்டம் பெற உள்ள யோசப் வாஸ் அடிகளாரின் திரு நிகழ்வும்: திருத்தந்தையின் வருகை நிகழ்வும் சிறப்புற அமைய வேண்டுகின்றோம்.

புதிய வருடம் புதிய உணர்வுகளையும், புதிய விளைவுகளையும் தோற்றுவிக்க வேண்டும் நாட்டிற்கும், மக்களுக்கும், நலன்களும் ஆறுதலும் அமைதியும் கிடைக்க வேண்டும்.

யாராக இருந்தாலும் புதிதாக அமைய உள்ள ஆட்சியானது பழிகளையோ, பாதகங்களையோ மேற்கொள்ளாமல் அனைத்து மக்களையும் ஒன்றாக ஏற்று ஒருமனதாக்கி ஒரே மக்கள் என்கிற உயர்ந்த எண்ணங்கொண்ட ஆட்சி என அனைத்து மக்களும் உணர்ந்து கொள்ளக்கூடிய ஆட்சி அமைய வேண்டி நிற்போம்.

வருடத்தின் தொடக்க மாதம், புதிய வருடத்தின் புதியமாதம்,அனைத்திலும் புனிதமும், புதுமைகளும், நிறைந்து விளங்கிப் பிரகாசிக்கவும், அனைத்து மக்களும் அமைதியுடன் கூடிய ஆறுதலின் நிலைகளைக் கண்டு களிப்படைய அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் வாழ்த்துக்களையும் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்

# ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

**திருச்சபையிலே கிறிஸ்து பெருவிழாவுக்கு முன்பிருந்தே கொண்டாடப்பட்டு வரும் திருவிழா ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழாவாகும். இந்த விழாவின் நோக்கமானது இயேசு பல்வேறு வகைப்பட்ட மக்களுக்குத் தம்மை மீட்பராக வெளிப்படுத்தியதை நினைவு கூர்ந்து அவரைப் புகழ்வதாகும். தொடக்க கிறிஸ்தவர்கள் இந்தத் திருவிழாவில் நான்குவகை வெளிப்படுத்தல்களை நினைவு கூர்ந்தார்கள்.**

- **பெத்லகேமில் இயேசு தம்மை மீட்பராக ஏழை இடையர்களுக்கு வெளிப்படுத்தியது.**
- **கிழக்கிலிருந்து வந்த ஞானிகளுக்கு வெளிப்படுத்தியது.**
- **30ம் வயதில் திருமுழுக்குப் பெற்று மக்களுக்க வெளிப்படுத்தியது.**
- **இறுதியாக கானாவூரில் திருமண நிகழ்வில் தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றித் தம் மாட்சியை வெளிப்படுத்தியது.**

இவ்வாறு நாளடைவில் கிறிஸ்தவ பிறப்பு முதலிய மற்ற நிகழ்வுகள் வேறு வேறு திருவிழாக்களாக மாறிவிட, திருக்காட்சி விழா மட்டும் ஜனவரி 6ம் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் இப்போது கிறிஸ்து பிறப்பு விழாவுக்குப் பின்வரும் ஞாயிறு தினத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

குறிப்பிடத்தக்கது. இயேசு ஞானிகளுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். பிறவினத்தவராக இருந்து கிறிஸ்தவர்களாக மாறிய தொடக்கக் கிறிஸ்தவர்கள் இந்த ஞானிகளை யூதரல்லா பிறவினத்தாரின் பிரதிநிதிகளாகக் கண்டார்கள்.

இந்த ஞானிகள் மகோயி (Magoi) எனப்படுவோர். அச் சொல்லிலிருந்து மாய வித்தைக்காரர்கள் எனப்படும் (Magicalns)எனும் சொல் தோன்றினாலும் அவர்கள் பார்சி**(Zorastrians)** மதத்தைச் சார்ந்த பேர்சியக் குருக்களாக இருக்க வேண்டும்.வானவியல் தெரிந்த இவர்கள் விண்மீனின் போக்கைக் கவனிக்கத் தெரிந்தவர்கள். கனவுகளுக்கு விளக்கம் சொல்லத் தெரிந்தவர்கள். பிந்திய மரபில் இவர்கள் அரசர்கள் என்று கருதப்பட்டார்கள். அவர்கள் பொன், சாம்பிராணி, வெள்ளைப் போளம் ஆகிய மூன்று காணிக்கைகளைக் கொடுத்ததால் மூன்று பேர் என்பது 5ம் நூற்றாண்டில் எழுந்த சிந்தனையாகும். 8ம் நூற்றாண்டிலிருந்து இவர்கள் கஸ்பார்,பல்தசார், மெல்கியோர் என்று கருதப்பட்டார்கள். இவர்களில் கஸ்பார் கறுப்பினத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதப்பட்டது. விண்மீன் வழிகாட்ட இவர்கள் மெசியா பிறந்த இடத்தைத் தேடி வந்தார்கள். கி.மு. 7ம் நூற்றாண்டில் வியாழக்கோளும், சனிக்கோளும் இணைந்த அரிதான தோற்றம் விண்ணில் ஏற்பட்டது என்று வானூலார் பெக்லர் என்பார் 1605ம் ஆண்டில் குறித்துள்ளார். அதே நேரம், **"யாக்கோப்பிலிருந்த விண்மீன் ஒன்று உதிக்கும்"** (எண் 24:17) எனும் இறைவாக்கு நிறைவேறுவதாக தூய மத்தேயு எழுதியுள்ளார். குழந்தையைக் கண்டதும் அவர்கள் உள்ளத்தில் இன்னொரு விண்மீன் உதித்தது. அக்குழந்தையே தங்கள் மீட்பர் என்று அவர்கள் கண்டு கொண்டார்கள். பிறவினத்தார் எருசலேமுக்கு வணங்க வருவார்கள் என எசாயாமுன்னுரைத்தவாறு (காண் எசா 45:14, 49:7) இவை நிகழ்ந்தன.

இதற்கு மாறாக எருசலேம் தலைவர்கள் அதிகமான முறையில் மெசியாவின் பிறப்புப் பற்றி விவிலியம் வழியாக அறிவுறுத்தப்பட்டாலும் அவர்கள் எருசலேமை விட்டு ஒருபடியும் மேலே செல்லவில்லை. எனவே அவர்கள் மெசியாவைக் கண்டு கொள்ள இயலவில்லை. கடவுளுக்கு நெருக்கமாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். கடவுளைக் காணவில்லை.ஏரோதுக்கு அப்போது வயதாகியிருந்தது. தன்னுடைய இடத்தை இன்னொருவர் பிடித்து விடுவாரோ என்பது அவனது கவலையாயிருந்தது. மெசியாவின் பிறப்பில் ஞானிகள் மட்டில்லா பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் ஏரோதோ கலங்கினான். அவன் மெசியாவைத் தேடி அவனைக் கொல்வதற்காகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் திருக் குடும்பம் போய்விட வைத்தான் அவன். இறுதியில் அவன் மெசியாவைக் காணாமலே, மனம் வருந்தாமலே விரைவில் இறந்தான்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவை அடையாளம் கண்டிருக்கிறோம். விவிலியம் அவரை நமக்கு அடையாளம் காட்டுகிறது. ஆயினும் நம்முடைய தேடல் தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். கிறிஸ்தவரின் வாழ்வு என்பதே கிறிஸ்துவுக்கான தொடர்ந்த தேடுதலாகும். அது கிறிஸ்துவைத் தொடர்ந்து கண்டு பிடித்துக் கொண்டிருப்பதாகும். அவருடைய இறுதி வெளிப்பாடு நம் சாவில் ஏற்படும். அப்போது 'அவர் இருப்பது போல் நாம் அவரைக் காண்போம்'.

# தைப் பொங்கல்



தைப்பொங்கல்! தை அன்று தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. தமிழர் திருநாளாக தமிழ்நாடு,இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள் எனும் பல தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா சமயங்கள் கடந்து அனேக தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. பொங்கல் உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாக கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல் வரலாறு : சங்க காலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பொழியவும் நாடு செழிக்கவும் பெண்கள் இந்நோன்பைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த நோன்பை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, பகலவன், உதவிய கால்நடை போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடப்படும் பொங்கல் கொண்டாட்டமாக மாறியது. பொங்கல் பண்டிகையைப் பொறுத்தவரையில் எக்காலத்திலும் விவசாயம் சம்பந்தப்பட்டதாகவே இருந்துள்ளது யாரும் மறுக்க முடியாத உண்மையாகவே இருந்து வருகிறது. இந்த விழா காவிரிப் பூம்பட்டினத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போது தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்ற மூன்று நாட்கள் மாத்திரமே ஆனால் அந்தக் காலத்தில் 28 நாட்கள் நடந்துள்ளதற்கான சான்றுகள் இருக்கிறது. அன்று பொங்கல் விழாவானது ஊரையும், நாட்டையும் சுத்தம் செய்வது போல நகர வீதிகளில் பழைய மணலை மாற்றி புது மணல் பரப்பி கொண்டாடினர்.

பகைமை,பசி, நோய் நீங்க இறைவனைப் பிரார்த்தனை செய்யும் விழாவாகவும், மாதம் மும்மாரி பெய்து பயிர் செழிக்கும் என மக்களின் நம்பிக்கை விழாவாகவும் இவ்விழா கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் சூரியன் பற்றிய அறிவு மக்கள் மத்தியில் வந்தவுடன் சூரியன் சந்தோஷத்தை தருபவர் என்ற நம்பிக்கை வந்து அக்கண் முன் காட்சி தரும் சூரியனுக்கு விழா எடுத்தனர் மக்கள். இது நன்றியின் விழாவாகவும் கொண்டாடப்பட்டது. அத்துடன் தாங்கள் அறுவடை செய்த புது நெல் தை முதல்நாளில் கொண்டு வந்து சேர்த்து இதனைப் பொங்கல் செய்து பரிமாறினர். இது நாளடைவில் பொங்கல் விழாவாக பின் மாறியது என வரலாறுகள் கூறுகின்றன. இது உலக மக்கள் தாமே கண்டுணர்ந்து தமது உழைப்பிற்கும், தமது உழைப்புக்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் உழவர் விழா எனவும் அழைக்கப்படுகிறது.

# புத்தாண்டே வருவாயே புது நிலைகள் தருவாயே

அருட்பணி N.C அருள்வரதன்

மலரும் புதுவருடம்
மகிழ்வினையே தரவேண்டும்
புலரும் பொழுதெனவே
மலரும் புதுவருடம்
மனங்கள் பலவற்றில்
மாறுதலைத் தரவேண்டும்

கெடுபிடிகள் கொடும்பழிகள்
அழியட்டும் மனதைவிட்டு
உயர் நிலையில் பீடமதாய்
உயரட்டும் மனங்களெங்கும்

மண்சரிந்து காட்டிவிட்ட
மாறாத் துயருள் வாழ்வு
துணையற்ற வாழ்வுகளைக் கைதூக்கி
துயர் துடைக்கக் கரங்களெங்கும்
உயர்ந்து வர வேண்டும்.

கடினங்கள் கொண்ட மனம்
கறைபடிந்த நிலைகள் காட்டும்
பழி கொண்ட உள்ளங்கள்
பகை தீர்க்கும் செயல்களினால்
விழிநீர்கள் பெருகிக் கண்கள்
வேதனையில் மூழ்காமல்
அழியாத நிலைகூறும்
ஆறுதலின் வழிகண்டு
பொழிகின்ற இன்பமழை
பொலிவுடனே பெருக வேண்டும்

உள்ளத்தின் உயர்வடிவை
உன்னதத்தின் நிலைகளாக
கண்டிடவே மனங்களுக்கு
காட்சி தரும் பெருநாளாய்
பிறக்கும் புதுவருடம்
புதுமைதர வேண்டுவோமே.

# நலம் தருவாய் புத்தாண்டே

அன்பென்னும் அமுதமழை பொழிந்து
அதர்மத்தை அழிக்க வரும் புத்தாண்டே
பண்பெனும் தேன்சுரந்து
பரிதவிக்கும் நெஞ்சங்களை
வாழ வைக்கம் புத்தாண்டே

இருளை அகற்றி
இன்பமாய் நாம் வாழ
வழிசமைக்கும் புத்தாண்டே
வறுமைப் பிணி நீங்கி
வசந்தம் எம்வாழ்வில் வந்திட
வருவாய் புத்தாண்டே

சிறுமை ஒழிந்து
சிறப்புகள் பெருகிட
வந்திடுவாய் புத்தாண்டே
குறுக்குவழி சென்றவர்கள்
குற்றத்தை உணர்ந்திட
குதித்தெழுவாய் புத்தாண்டே

ஆணவத்தை அழித்து
அகிலமது ஒன்றிணைய
அருள்தருவாய் புத்தாண்டே
மனித மனங்கள்
நல்லிசை பாடிடவே
நலம் தருவாய் புத்தாண்டே

திருமதி பிறிஜற் சுரேந்திரா
அன்புவழிபுரம்

# சிந்திக்க சிலதுளிகள்

யே. நீதா
சம்பூர் , தரம் 12

- வெற்றியைத் தேடி நீ செல்லாதே உன் மீது நம்பிக்கை வை, வெற்றி உன்னைத் தேடி வரும்.
- முயற்சி செய் தயங்காதே, நீ முயலும் போது உன்னை முட்களும் முத்தமிடும்.
- விடியும் என்று விண்ணை நீ நம்பு, வெற்றி உனதே.
- இரு கை கூப்பி கடவுளை வணங்குதை விட, ஒரு கை நீட்டி உதவி செய், இரு கை உன்னைக் கடவுளாக வணங்கும்
- வெற்றியாளனுக்கு இலக்குத்தான் முக்கியம்,இடையில் வரும் இடைஞ்சல்கள் முக்கியம் இல்லை.
- வலியோடு போராடினால் தான் ஒரு பெண் தாயாக முடியும்.
- இருளோடு போராடினால் தான் புழு வண்ணத்துப் பூச்சியாக முடியும்.
- மண்ணோடு போராடினால் தான் விதை மரமாக முடியும்.
- வாழ்க்கையோடு போராடினால் தான், நீ வரலாறு படைக்க முடியும்.
- வாழ்வில் வெற்றி பெற நண்பன் தேவை, ஆனால் வாழ்நாள் முழுவதும் வெற்றி பெற எதிரி தேவை.
- அதிகமாகச் சிரிக்கும் மனிதன் தனது மனதில் மிகப் பெரிய காயத்தை வைத்திருப்பான்.
- தன்னைத் தானே புகழ்பவன் தனக்குத் தானே இழப்பை உண்டு பண்ணிக் கொள்கிறான்.
- வருடங்கள் இருக்கின்றன என்று நாட்களை வீணாக்கி விடாதே.

# தைமகளே! வருக! வருக

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்று எல்லாம் தொழுதுண்டு பின்செல்வர்" (தி.கு.1033)**



தை பிறந்திட்டால்
தரணியில் வழி பிறக்கும்
என்னும் தாரக மந்திரம்
எம்மிடையே உள்ளன
தை மகளே! வருக.. வருக..
தாண்டவமாடும் பஞ்சம் நம்மை விட்டுப் போகட்டும்

திரைகடலோடியும் திரவியம் தேடிடுவாய்
திரவியம் தேடும் திராவிடர் குலமது
திருநாளாம் தைத் திருநாளாம்
தினையும் சாமையும் வரகும் நெல்லும் விழைந்திட
தை மகளே! வருக.. வருக...

உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்த
உழவனும் சேற்றில் கை வைக்கின்றான்
உண்ணும் சோற்றில் அறுசுவையோடு
உண்டு மகிழ்கின்றோம் குவலயமதில்
தை மகளே! வருக...வருக...
நன்நிறைவோடு பகலவனுக்கு
படைத்திடுவோம் - பொங்கல்
நவதானியம் விழைந்திடும் வையமதில்
நவரெத்தினமும் முத்தும் ஆம்பலும் பெற்ற நாடுதனை
மூவேந்தரும் முற்றுகையிட்டிட
மும்மொழி மாந்தரும் வாழ்ந்திட
தைமகளே! வருக.... வருக...
தம்வரவால் புகழோடு வாழ்வது சான்றாகும்

அ. குமார் கொரேயிரா
திருகோணமலை

# புதிய ஆண்டில் புதுயுகம் படைப்போம்

**"கடந்து போன காலமும் வாயை விட்டுச் சென்ற வார்த்தையும் திரும்பப் பெற முடியாதவை"** என்பது முதி யோர் பழமொழி ஆகும். அற்புதமான ஆண்டவர் கொடுத்த புதிய ஆண்டை நடை முறையில் பயன்படுத்துவோம், பயன்பல பெறுவோம்.

**"எவன் மற்றவர்களின் வேலைகளில் வீணாகத் தலையிடாமல், தன்னுடைய வாழ்வின் கடமைகளை அறிவுடனும், அக்கறையுடனும் கவனிக்கின்றானோ அவனுக்கு வெற்றி, கௌரவம், செல்வாக்கு ஆகிய மூன்றும் சேரும்"** என்றார் ஜேம்ஸ் அலன் எனும் அறிஞர். இதனையே பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவரும் ,

**"தன்னைத்தான் காதலனாயின் எனத் தொன்றும் துன்னக்க தீவினைப்பால்"** என அழகாகக் கூறியுள்ளார். எனவே மலரும் புத்தாண்டில் நேரத்தை திட்டமிட்டு எம் வாழ்வில் வளர்ச்சி பெற கடமையைச் சரியாகச் செய்வோம். வெற்றி மேல் வெற்றி வந்து எம்மைச் சேரும்.

மரம் வாழ மண்ணோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மீன் வாழ நீரோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மனிதன் மனிதனாக வாழ அன்புள்ளம் கொண்டவர்களோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு தொடர்புகளைப் பேணும் போது இப்புத்தாண்டில் தொட்டதெல்லாம் துலங்கும் என்பது திண்ணம்.

இப்புதிய ஆண்டு முழுவதும் நம் மனதிற்குள் மற்றவர்களைப் பற்றிய இனிமையான நினைவுகளை மட்டுமே குடிவைப்போம். இப்புதிய ஆண்டில் நம்மைப் பிரிப்பதை மறப்போம். எது நம்மை இணைக்குமோ அதனை மாத்திரமே நினைப்போம். மண்ணுலகில் மாண்புடன் வாழ்ந்து புதுயுகம் படைப்போம்.

திருமதி. யேசுதாசன் தம்மிகா
மூதூர்



# முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளாரின் வினாவிடைப் போட்டி

**முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளார் இலங்கையின் புனிதராக திருநிலைப்படுத்தப்படும் நிகழ்வை முன்னிட்டு வாசகர்களுக்கு நடாத்தப்படும் வினா விடைப் போட்டியாகும்.**

**இப்போட்டியானது மார்கழி மாத இதழிலும் தை ~ 2015ம் ஆண்டின் இதழிலும் வெளியாகும், என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். சரியான விடை எழுதி அனுப்புவோரில் 3 அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். 2015ம் ஆண்டிற்கான விவிலிய நாட்குறிப்பேடு இவர்கள் மூவருக்கும் பரிசாக வழங்கப்படும்.**

11. கண்டியிலிருந்து புத்தளத்திற்குச் செல்கின்ற வழியில் முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகள் எந்த ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது?
    1. மல்வத்து ஓயா 2. தெதுறு ஓயா
    3. களுத்தோயா 4. கலாவாவி

12. முத்திப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகள் கண்டிக்குச் சென்ற போது அங்குள்ள மக்கள் எந்நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள்?
    1. காய்ச்சல் 2. வாந்திபேதி
    3. அம்மைநோய் 4. நீரிழிவு நோய்

13. இலங்கையில் தனது பணியை எத்தனை ஆண்டு காலம் அருளாளர் ஜோசேப்வாஸ் ஆற்றினார்?
    1. 24 2. 12 3. 27 4. 18

14. அருளாளர் ஜோசேப்வாஸ் யாழ்பாணத்தில் பணியாற்றிய காலத்தில் "சின்ன உரோமை" என அழைக்கப்பட்ட இடம் எது?
    1. மாதகல் 2. சில்லாலை 3. பூநகரி
    4. பரந்தன்

15. அருளாளர் ஜோசேப்வாஸ் அவர்களுக்கு யாக்கோமே கொன்சால்வே அடிகள் என்ன உறவு முறை?
    1. மகன் 2. மைத்துனன் 3. தம்பி
    4. மருமகன்

16. அருளாளர் ஜோசேப்வாஸ் அடிகள் சிறைத்தண்டனை அனுபவித்த இடம் எது?
    1. யாழ்ப்பாணம் 2. கண்டி 3. புத்தளம்
    4. மன்னார்

17. இலங்கை ஒரு தனி மறைமாநிலமாக உருவாக்கப்பட்ட ஆண்டு?
    1. 1745 2. 1785 3. 1740 4. 1790

18. இலங்கையின் கத்தோலிக்க மதத்திற்கு சுதந்திரம் அளித்தவர்கள்?
    1. ஒல்லாந்தர் 2. போர்த்துகேயர்
    3. ஆங்கிலேயர் 3. இஸ்லாமியர்

19. அருளாளர் ஜோசேப்வாஸ் அடிகள் மரணமான ஆண்டு?
    1. 1811 ஜனவரி 16 2. 1611 ஜனவரி 16
    2. 1911 ஜனவரி 16 3. 1711 ஜனவரி 16

20. அருளாளர் ஜோசேப்வாஸ் அடிகளாருக்கு முத்திபேறுபெற்ற பட்டத்தை வழங்கிய திருத்தந்தை?
    1. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்
    2. திருத்தந்தை 16வது ஆசீர்வாதப்பர்
    3. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்
    4. திருத்தந்தை 23ம் அருளப்பர்

இப்படிவத்திலே எழுதி அனுப்பவும். அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 01. 2015

பெயர் ...........................................
முகவரி ...........................................

**குறிப்பு : - அருளாளர் ஜோசேப்வாஸின் வினாவிடைப் போட்டியானது (மார்கழி, தை) இரண்டு இதழிலும் வரும் 20 வினாக்களுக்கும் பதிலளிப்போர் குலுக்கல் முறையில் 3 அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்படுவர் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபை மகாநாடும் பொதுக் கூட்டமும் ~ 2014







எமது திருமலை மறைமாவட்ட மேய்ப்புப் பணிச் சபையின் 3வது மகாநாடானது 2014 .12. 13 அன்று காலை 08.00 மணியளவில் தீபம் நிலையத்தில் எமது மறைமாவட்ட ஆயர் அதி வந். கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் மங்கள
விளக் கேற்றலுடனும், இறை வழிபாட்டுடனும் இனிதே ஆரம்பமானது.

கூட்டத்தின் முதல் நிகழ்வாக 2015ம் ஆண்டிற்கான மையப்பொருள் **"தூய யோசேப் வாஸ் அடிகளின் ஒளியில் புதிய முறை நற்செய்தி அறிவிப்பு"** என்ற பதாதையை எமது ஆயர் அவர்கள் திறந்து வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். தொடர்ந்து எமது பொது நிலையினர் ஆணைக் குழுவின் இயக்குனர் அருட்பணி S.S. ஜோன்பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்க திருமலை மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபை தலைவரும் எமது மறைமாவட்ட ஆயருமான அதி வந். ஆயர் அவர்கள் தமது தலைமையுரையினை நிகழ்த்தினார்.
அவ்வுரையில் 2015ம் ஆண்டு **"அர்ப்பணித்த வாழ்வு"** (துறவற வாழ்வு) என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளமையால் அனைத்துத் துறவிகளும் அர்ப்பணத்தோடு திருச்சபைக்கு பணியாற்ற வேண்டும் எனவும் நற்செய்தி பரப்புவதற்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். என்ற சிந்தனையோடு செயற்பட வேண்டும் எனவும் எமது திருத்தந்தையின் வருகையை குறித்தும் பேசினார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய மகா நாட்டிற்கு உரைவழங்க வந்திருந்த அருட்பணி ரொபின்சன் போல் அவர்களை பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி S.S. ஜோன்பிள்ளை அவர்கள் அறிமுகம் செய்து வைத்ததைத் தொடர்ந்து **"தூய யோசேப் வாஸ் அடிகளின் ஒளியில் புதிய முறை நற்செய்தி அறிவிப்பு"** என்ற தலைப்பில் தனது உரையை அருட்பணி ரொபின்சன் போல் அடிகளார் நிகழ்த்தினார்.

**அத்தலைப்பானது :**

(1) புதிய முறை நற்செய்தி அறிவிப்புப்பணி
(2) யோசேப்வாசின் வாழ்வு எவ்வாறு நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு பங்காற்றியது.
(3) புதிய முறையில் எவ்வாறு பணியை ஆற்றலாம் என்று மூன்று தலைப்பிற்கு கீழ்மிகவும் அழகாகவும் விளக்கமாகவும் தமது கருத்துக்களை முன்வைத்து அத்தலைப்பிற்குள்ளாகவே அங்கத்தவர்களை 3 குழுக்களாக பிரித்து கலந்துரையாடலுக்காக அருட்தந்தையால் வழிகாட்டப்பட்டு அக் கருத்துக்களின் சாரம்சமும் அருட்தந்தையால் முன் வைக்கப்பட்டது அக் கூட்டத்தின் சிறப்பம்சமாக திகழ்ந்தது.

அத்தோடு இம்முறை மகாநாடானது தமிழ், சிங்களம், ஆகிய இரு மொழிப்பிரிவினருக்கும் ஒன்றாக இடம் பெற்றதோடு சிங்கள மொழி பேசுவோருக்கும் அதே தலைப்பில் கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி அன்ரனி சமரதுங்க அவர்களால் உரை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2014ம் ஆண்டிற்கான செயலறிக்கை மறைமாவட்ட மேய்ப்புப்பணிச் சபையின் செயலாளர் திருமதி சுரேந்தினி மணிவண்ணனால் வாசிக்கப்பட்டு அறிக்கை சரியென முன்மொழிந்து வழிமொழியப்பட்டதோடு அறிக்கைப் பற்றிய ஆய்வுகளும் அருட்பணி S.S. ஜோன்பிள்ளை அவர்களால் மேற்கொள்ளப்பட்டு பொருளாளர் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து பங்குகள் ஆணைக்குழுக்களின் அறிக்கைகளும் செயலாளரினால் வாசிக்கப்பட்டதைத் தொடர்து எதிர்வரும் ஆண்டிற்கான செயற்பாடுகள்பற்றி ஆராயப்பட்டது.

**அவற்றுள் :**

அருட்பணி ரொபின்சன் போல் தமது உரையில் இடம் பெற்ற குழு ஆய்வின் முடிவுகளை செயற்பாடாக முன்வைத்தார்.

1. பிரிந்து போன கத்தோலிக்கர்களை திருச்சபைக்கு கொண்டு வருதல்
2. பல மொழிகளைக் கற்று நற்செய்தி அறிவித்தல்
3. குடும்ப சந்திப்பு
4. பொது நிலையினருக்கான அடிப்படை வேதாகம அறிவை வழங்குதல்
5. துறவறம் பொது நிலையினர் இருவருக்கும் புதிய முறை நற்செய்தி அறிவிப்பிற்கான பயிற்சி வழங்குதல். (வெளிநாடு/உள்நாடு)
6. நற்செய்தி அறிவிக்கும் ஆர்வம் கொண்ட பொதுநிலையினருக்கு வாய்ப்பளித்தல்
7. நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு ஒன்றை அமைத்தல்.

இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட ஆயர் அவர்கள் இவ் விடயங்களை வருடாந்த சுற்றுமடலில் வெளியிடுவதாகவும் அதனை 2015.01.04 ம் திகதி பங்குகளில் வாசிக்க வேண்டும் எனவும் கூறினார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்



## குட்டிக் கதை



-Fr. NC-

"இருவர் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். என்ன பேசினார்களோதெரியாது பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர் திடீரென்று "விம்மி விம்மி" அழுதார்.

பேச்சுத் தொடர்கின்றது இரண்டொரு நிமிடத்தில் அழுதவர் அழுகையை நிறுத்திவிட்டு சிரித்தார்.

முதலில் என்ன பேசினாரோ அதைக் கேட்டு அழுதார் பின்னர் என்ன பேசினாரோ அதைக் கேட்டுச் சிரித்தார்.

இதிலிருந்து ஒன்றை அறியலாம். முதலில் பிடிக்கவில்லை அழுதார், பின்னர் பிடித்தது சிரித்தார்.

பேசுமுன் பேச்சு பேசுபவருக்குச் சொந்தம் பேசியபின் பேச்சு கேட்பவருக்கே சொந்தம் சிரிப்பை வருவிப்பதும், சிரிப்பை மறைத்தழிப்பதும் கேட்கும் வார்த்தையிலே தங்கி உள்ளது உண்மைதானே.

## வத்திக்கான் செய்தி

### அருளாளர் ஜோசப்வாஸ் புனிதராக அறிவிக்கப்படுவது குறித்து அக்களிப்பு



அமைதி மற்றும் இலங்கையின் திருத்தூதராக நோக்கப்படும் அருளாளர் ஜோசப்வாஸ் அவர்கள் புனிதராக அறிவிக்கப் படுவதைக் குறித்து இலங்கை ஆயர்கள் தங்கள் பெருமகிழ்வை வெளியிட்டுள்ளனர். அருளாளர் ஜோசேப்வாஸ் அவர்கள் புனிதராக அறிவிக்கப்படுவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளது குறித்து ஃபீதெஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய கண்டி ஆயர் வியான்னி பெர்னான்டோ அவர்கள் முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஓர்ஆவல் நிறைவேறியிருக்கும் போது அது பற்றி என்ன சொல்வது என்று தனது மகிழ்வைத் தெரிவித்துள்ளார். திருப்பீடம் வெளியிட்டுள்ள இச் செய்தி இலங்கை கத்தோலிக்க சமுதாயத்திற்கு அளவிட முடியாதுள்ளது எனவும் இந்நிகழ்வு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைத் திருப்பயணத்தின் போது நடைபெற வேண்டும் என்றும் தாங்கள் நம்பிக்கையோடு செபிப்பதாகவும் கூறியுள்ளார் ஆயர் வியான்னி.

இலங்கையின் திருத்தூதராகிய அருளாளர் ஜோசப்வாஸ் அவர்கள்இந்தியாவின் கோவா மாநிலத்தின் பெனவ்லினில் 1651ம் ஆண்டு பிறந்தார் பிலிப் நேரி சபையில் சேர்ந்து டச்சுக் காரர்களின் வன்முறை அடக்குமுறைகளுக்கு கத்தோலிக்கர் பலியாகிக் கொண்டிருந்தனர். மறைந்து வாழ்ந்த இக்கத்தோலிக்கருக்கு மறைபணியாற்றிய அருளாளர் ஜோசப்வாஸ் அவர்கள் 15க்கும் மேற்பட்ட ஆலயங்களையும் 400 சிற்றாலயங்களையும் கட்டினார். இவர் 1711ம் ஆண்டு கண்டியில் காலமானார். இவர் சிங்களம், தமிழ், ஆகிய இரு மொழிகளிலும் திருவிவிலியத்தை மொழிபெயர்த்துள்ளார்.

### திருத்தந்தையின் திருப்பயணத்தில் அரசியல் கூடாது கொழும்பு பேராயர்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு மேற்கொள்ளும் திருப்பயணத்தில் அரசியல் நுழைய அனுமதிக்க வேண்டாம் என்று கொழும்புப் பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். 2015ம் ஆண்டு ஜனவரி 13 முதல் 15வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு மேற்கொள்ளும் திருப்பயணத்தைக் குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய கர்தினால் ரஞ்சித் அவர்கள் இத் திருப்பயணத்தின் போது தேர்தல் பிரச்சாரம் எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுமாறு அரசைக் கேட்டுள்ளதாகவும் கூறினார்.
இத்திருப்பயணத்தின் போது திருத்தந்தை அவர்கள் இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை மரியாதையின் நிமித்தம் சந்திப்பார் என்றும் திருத்தந்தை மன்னார் மாவட்டத்திற்குச் செல்வார் என்றும் கர்தினால் ரஞ்சித் அவர்கள் அறிவித்துள்ளார்.
மேலும் இத்திருப்பயணத்தின் போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குண்டு துளைக்காத காரில் செல்ல விரும்பவில்லை எனவும் கர்தினால் ரஞ்சித் அவர்கள் தெரிவித்துள்ளார்.

திருத்தந்தையின் திருப்பயணத்துக்கான இலட்சனை ஒன்றும் திரு அவையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே அரசுத் தலைவர் ராஜபக்ஷ அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தேர்தலை நடத்துவதற்கு தயாரித்து வருகிறார் என ஊடகங்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய செபஸ்தியாரின் வரலாறு



விசுவாசத்தைக் கட்டிக் காக்க வீர மரணமடைந்து, விண்ணுலக பேரின்ப வாழ்வை தன் உடைமையாக்கிக் கொண்ட வீரப்பெருமகன் புனித செபஸ்தியார் பிரான்சிஸ் நாட்டைச் சார்ந்த நர்போன் நகரில் பிறந்து, இத்தாலயில் உள்ள மிலான் நகரில் வளர்ந்து வனப்புமிக்க வாலிபனாகத் திகழ்ந்தார்.
கிறீஸ்துவுக்குப்பின் சுமார் 283 ஆண்டில் உரேமைப் பேரரசன் கறினுசின் படையில் செபஸ்தியார் சேர்ந்து, சிறந்து ஒருபடைவீரன் ஆனார். வேதத்திற்காக சிறைக் கூடங்களிலே அடைபட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்த விசுவாசிகளை சந்தித்தார். அன்பொழுக அவர்களுக்கு ஆறுதல் கூறினார். கிறீஸ்துவின் அன்பைக் காட்டி வீர உரைகளை ஊட்டி விசுவாசத்தில் அவர்கள் நிலைத்து நிற்கச் செய்தார். கிறீஸ்தவர்களுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக்கொண்டு செயல் புரிந்த அவர் தனது உயர்பதவியையும் உடைமைகளையும் பெரிதென எண்ணவில்லை.

சிறையில் வேதனையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த மாற்குஸ், மார்செல்லியானுஸ் என்ற இரு சகோதரர்கள் வேத விசுவாசத்தில் தத்தளித்துக் கொண்டிருந்ததை அறிந்த செபஸ்தியார், அவர்கள் இருந்த சிறைக்கு விரைந்து சென்று விசுவாசத்தில் அவர்கள் நிலைத்து நிற்கச் செய்தார். இந்த நேரத்தில் அங்கு நின்று கொண்டிருந்த சோயே என்னும் ஊமைப் பெண், செபஸ்தியாரின் பாதங்களைப்பற்றி ஆறு ஆண்டுகளாக பேசாமடந்தையாக இருக்கும் தனக்கு பேசும் வரத்தைப் பெற்றுத் தருமாறு வேண்டினாள். புனிதரும் மனமிரங்கி அவளது வாயிலே சிலுவை அடையாளம் வரையவே அவளது வாயும் திறக்கப்பட்டு முன்பு போல அவள் பேசத் தொடங்கினாள். புனிதர் தனக்கு வழங்கிய நன்மைக்கு நன்றிகடனாக அவளும் அவளது கணவரான நிக்கோஸ் கிராத்தூஸ் என்பவரும் மனம்மாறி கத்தோலிக்கத் திருமறையை தழுவினர். தவிர மாற்குஸ், மார்செல்லியானுஸ் இவர்களின் மனைவி மக்களும், பெற்றோரும், சிறைக் காவலனான குளோத்தியுஸ் என்பவனும் மற்றும் பதினாறு பேர்களும் மதம்மாற விரும்பி சிறை அதிகாரியான நிக்கோஸ் கிராத்துஸின் உதவியுடன் போலிக்கார்ப் என்னும் பரிசுத்தக் குருவை அணுகி வேத விளக்கமும் பெற்று ஞானஸ்நானம் பெற்றனர்.

பேரரசன் தான் பெற்ற உடல்நலத்தின் நன்றிக்கடனாக, சிறையில் அடைபட்டுக் கிடந்த கிறீஸ்துவர்களை உடனடியாக விடுவித்தது மட்டுமன்றி தனக்கு அடிமையாயிருந்த 1400 புதுக் கிறீஸ்தவர்களையும் விடுவித்து தானும் தனது அரசுக்கட்டிலை விட்டு இறங்கினான்.

பேரரசன் புனித செபஸ்தியாரும் ஒரு கிறிஸ்தவர் என்று இறுதியாக அறிந்து அவரைத் தன் முன் அழைத்து, **'நன்றி மறந்தவன்' என்ற பழியை அவர் மீது சுமத்தி அவரைக் கண்டித்தான். அதற்கு அவர் இறைவனை வாழ்த்தி வணங்கி அவரது திருவுளத்திற்கேற்பவே தான் நடப்பதாயும் அரசர்களின் சேம நலத்திற்காகவே தாம் பாடுபடுவதையும் செபஸ்தியார் அமைதியாக கூறினார்.** தியோக்கிளேசியான் தான் அம்புகளுக்கு இரையாக்கிய மனிதன் தன்முன் நிற்பதை கண்டு விழித்து **அம்புகளால் எய்து கொள்ள நாம் அனுப்பின செபஸ்தியான் நீதானா?** என்றார்.

புனிதர் நான்தான் அவர், **"நீர் கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறீர் என்று உலகம் அறியும் பொருட்டு மீட்பராகிய இயேசுகிறிஸ்து என்னை உயிரோடு காப்பாற்றினார்"** என்றார்.

இவ்வாறு கூறியதைக்கேட்ட அரசன் வெகுண்டெழுந்து, செபஸ்தியாரை தடிகளால் அடித்துக் கொல்லும்படி ஆணையிட்டான். அப்படியே புனித செபஸ்தியார் கி.பி. 288 ஆம் ஆண்டு ஜனவரி 20ம் நாளில் அடிக்கப்பட்டு மரித்து மோட்ச முடி பெற்றார். புனிதரின் காட்சியில் எச்சரிக்கப்பட்ட லூசினாள் என்பவள் புனிதரின் திருவுடலை இரகசியமாக எடுத்து வந்து புனித இராயப்பர் சின்னப்பர் கல்லறை வாசற்படியின் அருகில் அடக்கம் செய்தாள்.

# திருகோணமலை மறைமானிலச் செய்திகள்

### மறைக்கல்வி மாணவர்களுக்கு முதல் நன்மை உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள் ஆயரினால் வழங்கப்பட்டது.

கடந்த 08.11.2014 அன்று இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் திருகோணமலை மறைமாவட்ட அதிவந்தனைக்குரிய ஆயர் J.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஒன்பது மறைக்கல்வி மாணவர்களுக்கு முதல் நன்மையும் இருபது மறைக்கல்வி மாணவ மாணவிகளுக்கு உறுதிபூசுதலும் வழங்கி வைக்கப்பட்டது. பங்குத்தந்தை யூட்சர்வானந்தன் உட்பட அருட்தந்தை அனிஸ்டன் மொறயஸ் அவர்களும் இணைந்து சிறப்பித்தார்கள்.

### இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் ஆயரின் பிறந்ததின கௌரவிப்பு 08. 12.2014

திருகோணமலை இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் கடந்த 08ம் திகதி திருகோணமலை மறைமாவட்ட அதிவந்தனைக்குரிய ஆயர் J.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை கௌரவித்து 78வது பிறந்ததின நிகழ்வாக பங்குத்தந்தை யூட்சர்வானந்தன் அவர்களோடு அருட்தந்தை அனிஸ்டன் மொறயஸ் அவர்களும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பரிசில்களும் ஆயருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

### பங்குத்தந்தையின் குருத்துவ நினைவும் பிறந்தநாள் நிகழ்வும்

கடந்த 21.11.2014 அன்று எமது பங்குத்தந்தை அவர்களது பிறந்த தினம், குருத்துவ 6ம் ஆண்டு நிறைவை முன்னிட்டும் இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கேக் வெட்டும் நிகழ்வும் நடைபெற்றது. தந்தை அவர்களது குடும்ப உறவினர்களும் கலந்து தந்தை யூட்சர்வானந்தன் அவர்களை வாழ்த்தி ஆசீரும் வழங்கினர். இந் நிகழ்வை யோசேப்வாஸ் மூப்பர் குழு ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சென்யோன் அம்பியுலன்ஸ்

திருகோணமலை மாவட்ட சென்யோன் அம்பியுலன்ஸ் முதலுதவி படைப்பிரிவானது முதல் முறையாக ஞாயிறு மறைபாடசாலையில் முதலுதவி படைப்பிரிவினை ஆரம்பிக்கும் முகமாக உவர்மலை குழந்தை இயேசு ஆலய ஞாயிறு மறைப்பாடசாலையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தது. இதற்கு எமது மறைமாவட்டத்தின் அதி.வந். ஆயர் கலாநிதி J.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் அனுமதியுடனும் முன்னால் பங்குத்தந்தை யூட் சர் வானந் தன் அடிகளின் தலைமையிலும் ஒத்தாசையுடனும் முன்னால் திருமலை மாவட்ட ஆணையாளர் திருவாளர் தேவசகாயம் அவரின் குழுவினரால் மூன்று நாள் வதிவிடப் பயிற்சியும் வழங்கப்பட்டது.
இதன் பயனாக எமது மறைபாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களுமாக 21 பேர் தேசியமட்ட எழுத்துப் பரீட்சைக்கும் செயல் முறைப் பரீட்சைக்கும் தோற்றி அதிசிறப்புச் சித்தி எய்தி அங்கிகரிக்கப்பட்ட அரச சான்றிதலும் பெற்றனர். இவ் அமைப்பானது எமது மாவட்டத்திலேயே ஞாயிறு மறைப்பாடசாலைக்குள் முதல் முறையாக அறிமுகம் செய்து ஆரம்பித்தமை சரித்திரத்தில் முத்திரை பதித்த விடயமாக காணப்பட்டமையால் இதனை கௌரவிக்கும் முகமாக 30.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை எமது மறைமாவட்ட ஆயர் அவர்களினால் சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆயர் அவர்களின் பெயர் கொண்ட பதக்கமும் ஆயர் அவர்களால் அணிவிக்கப்பட்டது. மேலும் புதிய முதலுதவிப் படைப்பிரிவினரை உற்சாகம் ஊட்டி கௌரவிக்கும் முகமாக திருமலை எகேட் கரிதாஸ் நிறுவனமும் தமது நிறுவனத்தின் பெயர் கொண்ட பதக்கத்தினை தந்து கௌரவித்திருந்தனர். அதனை பங்குத்தந்தை அவர்கள் படையினருக்கு அணிவித்தார்.
இவ் வரலாற்று நிகழ்வினை நினைவு கூறுமுகமாக அத்தருணத்தில் பங்குத் தந்தையாலும் பங்கு மக்களாலும் ஆயர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது. அன்றைய நிகழ்வில் திருகோணமலை மாவட்ட புதிய ஆணையாளர் திருவாளர் யோ.பிரகாஷ் அவர்களும் வருகை தந்து சிறப்பித்ததோடு ஞாயிறு பாடசாலைக்கான முதலுதவிப் படைப்பிரிவிற்கு உதவி மாவட்ட ஆணையாளராக திருவாளர் பரராஜசிங்கம் போல் பிரகாஷ் அவர்கள் உத்தியோக பூர்வமாக நியமனம் செய்யப்பட்டார்.

### தூய குவாடலூப்பே ஆலயத்தில் 2014ம் ஆண்டுக்கான மறைக்கல்வி மாணவர்களின் ஒளிவிழா போட்டிகள்

தூய குவாடலூப்பே ஆலயத்தில் 2014ம் ஆண்டுக்கான மறைக்கல்வி மாணவர்களின் ஒளிவிழா போட்டிகள் 14.12.2014 அன்று நடைபெற்றது. இதனை சிறப்பாக நடாத்துவதற்கு நடுவராக அருட்தந்தை நிதிதாசன் அடிகளார் வருகை தந்து சிறப்பித்தார்.

### திருமலை மறைமாவட்ட மேய்ப்புப்.........

வேறு விடயங்கள் பற்றி பேசப்பட்ட போது எமது ஆயர் அவர்கள் மறைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் O/L, A/L கல்வித் தகைமைகளோடு புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அதைத் தேர்வு எழுதி சித்தி பெற்றால் அது டிப்ளோமா சான்றிதழோடு அரசாங்கத்தால் நிரந்தர நியமனமாக வழங்க இருப்பதாகவும் அறிவித்தார்.

மேலும் அருட்பணி யூட் சர்வானந்தா எமது மறைமாவட்டத்தில் சிங்கள சஞ்சிகை ஒன்றும் வெளிவந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க சபையும் அதனை வரவேற்றது. தொடர்ந்து ஆயர் எமது மறை மாவட்டத்தில் மீண்டும் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதோடு இருமொழி பேசுபவர்களையும் இணைத்து மகா நட்டினை நடத்துவது விரும்பத்தக்கதா? என சபையில் வினவியபோது அனைவரும் ஏகமனதாக விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

இறுதியாக மேய்ப்புப் பணிச்சபை செயலாளர் திருமதி S. மணிவண்ணன் அவர்களின் நன்றியுரையுடனும் தூய யோசப்வாசின் செபத்துடனும் (இருமொழிகளிலிலும்) ஆயரின் ஆசீருடனும் மகாநாடானது பி.ப 2.15 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

**மேய்ப்புப்பணிச்சபை செயலாளர்**
**திருமலை மறைமாவட்டம்**

### கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி



**திருமலைத்தீபம் ஆசிரியரினால் இப்போட்டிக்கான பரிசுத் தொகை திருமறைக்கல்வி நிலையத்தில் வழங்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இறைவனுக்காக தம்மை அர்ப்பணஞ் செய்தோர் பேறுபெற்றோர்’





**“அவனியிலே இறைவனுக்காய் அர்ப்பணஞ் செய்தோர் பேறு பெற்றோர்”** எனும் பாடல் வரிகள் அர்ப்பண வாழ்வின் அர்த்தத்தை என்னை உணரச் செய்தவை. இந்த வருடமானது அர்ப்பண வாழ்விற்கென பிரத்தியேகமாக முக்கியப் படுத்தப்பட்டுள்ளது. அர்ப்பண வாழ்வின் மேன்மை பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அர்ப்பண வாழ்விற்கென தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தாம் இறைவனின் அழைப்புக்கு செவிமடுத்துள்ளோம் என்பதை எவ்வேளையிலும் தமது மனதிலிருத்தி, அதனை முக்கியப்படுத்தி எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டிருக்க வேண்டியவர்கள். ஏனெனில் தம் வாழ்வு முழுவதையுமே இறைபணிக்காக கையளித்துள்ளமையால் இது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் அர்ப்பணமாகிறது. **(உரோ.10:15) “நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன”** என்னும் இறைவார்த்தை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே இந்த அர்ப்பணஞ் செய்யப்பட்டோர் என வலியுறுத்துகிறது. இவர்கள் இறைவனுக்கென ஆற்றும் பணி எல்லா நற்பண்புகளையும் சிறப்பாக மனத்தாழ்மை, கீழ்ப்படிவு, திடம், கற்பு, விடாமுயற்சி என்பவற்றைத் தமது அணிகலனாகக் கொண்டு அவர்களின் செயல்கள் மூலம் தூண்டி எழுப்பப்பட வேண்டும்.இதனால் கிறிஸ்துவில் காணப்பட்ட ஆவிக்குரிய வாழ்விலும். வழிநடத்துதலிலும் கீழ்ப்படிவு, எளிமை என்னும் பண்புகளிலும் பங்கு பெறுகின்றனர்.

இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்தவர்கள் அனைத்திற்கும் மேலாக இறைவனை மட்டும் தேடுவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். இதற்கென இவர்கள் மனத்தாலும் இதயத்தாலும் இறைவனுடன் ஒன்றிக்கச் செய்யும் ஆழ்ந்த தியானத்தோடும், இறையாட்சி உலகின் கடை எல்லை வரை பரவிட ஆர்வமுடன் உழைப்பவர்களாகவும் விளங்க வேண்டும். திருச்சபையில் திருத்தூதுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பற்பல சபைகள் உண்டு. இச்சபைகள் தமக்கு அளிக்கப் பெற்ற அருளுக்கேற்ப வெவ்வேறு கொடைகளைக் கொண்டுள்ளன. **(உரோ. 12: 6 - 8)** “தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செயவதிலும் தாம் பெற்ற அருட்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும்”

திருத்தூதுப்பணியும் மக்கள் நலப் பணிகளும் துறவற வாழ்வின் இயல்பிற்கு உரித்தானவை. அர்ப்பண வாழ்வு முழுவதும் திருத்தூது உணர்வில் காலூன்றி அவர்களின் மனநிலையில் உருப்பெற்று செயல்களினால் உலகமெங்கும் பரப்பப் பட வேண்டும். எல்லாவற்றிற்கு மேலாக கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான தமது அழைத்தலுக்கு குறித்த சபையினூடாக பதில் கொடுப்பவர்களாகவும் கிறிஸ்துவிற்காக பணி புரிபவர்களாகவும் வாழ்வது அவர்கள் இறைவனுடன் கொண்டுள்ள நெருங்கிய உறவிலிருந்து தானாகவே வெளிப்பட வேண்டும். விண்ணரசின் பொருட்டு அர்ப்பணிக்கப்பட்டோர் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிவு என்னும் பண்புகளை வாழ்வதற்கு உறுதி கொள்வார்கள். இவற்றுள் சிறப்பான அருள் கொடை கற்பு ஆகும். இவர்கள் காட்டும் பிறரன்புசுயநலமென்னும் தனிவட்டத்திற்குள் அமையாது பரந்த அன்பு எல்லோருடனும் பகிரப்படும் பொது வட்டத்திற்குள் வாழ அழைக்கிறது. அத்துடன் அர்ப்பணிக்கப்பட்டோர் இறைபணியிலும், இறைவாக்குப் பணியிலும் தங்களை முழுமையாக அர்ப்பணிக்க இப்பண்பு வழியமைத்துக் கொடுக்கிறது.

திருச்சபை கிறிஸ்துவை தன் ஒரே மணமகனாகக் கொண்டு ஏற்பாடாகிய திருமணக் கொண்டாட்டம் வெளிப்படும் நாளில் துறவிகளின் கற்பு நிறைவாழ்வு மூலம் அதன் அர்த்தத்தை நம்பிக்கை கொண்டோர்க்கு புரிய வைப்பார்கள். அர்ப்பணிக்கப்பட்டோர் அக்கற்பு நிறை வாழ்வை வாழ அவர்கள் இறைவார்த்தையில் கொண்ட உறுதியும் , இறைத்துணையில் வைத்த ஆழமான நம்பிக்கையுமே காரணமாயிற்று.

அடுத்து கிறிஸ்துவை பின்பற்றுவதின் அடையாளமாக திகழ்வது மனமுவந்து ஏற்படும் ஏழ்மை என்னும் பண்பாகும். **(2 கொரி. 8 : 9) “அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்”.** எனவே அர்ப்பணிக்கப்பட்டோர் அகமும, புறமும் ஏழைகளாய் விண்ணுலகில் தமது செல்வத்தை சேகரித்துக் கொள்பவர்களாக வாழ வேண்டும். இவர்கள் உழைத்து வாழ்ந்தாலும் பணிபுரிவதற்கும் தத்தம் அலுவல்களை செய்வதற்கும் உடன்பட்டாலும் எல்லைக்கு மீறிய கவலையனைத்தையும் ஒதுக்கிவிட்டவர்களாய் விண்ணகத்தந்தையின் பராமரிப்புக்கு தம்மை முற்றாக கையளித்து வாழ வேண்டியவர்கள்.

அர்ப்பணிக்கப்பட்டவர்கள் வாழும் கீழ்படிவு, மனித ஆளுமையின் மேன்மையை குறைப்பதில்லை. இறைபிள்ளைக்குரிய சுதந்திரத்தால் நம்ரைம முதிர்ச்சி நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. கிறிஸ்துவை பின்பற்றி வாழும் இவர்கள் தூய ஆவியின் தூண்டுதலால் இறைவனுக்குப் பதிலாக இருக்கும் தலைமைத்துவத்திற்கு நம்பிக்கை உணர்வில் கீழ்படிகின்றனர். தமக்கு அருளப்படும் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை செய்வதிலும், தமது அறிவு, ஆற்றல், இயற்கையான கொடைகள் இனைத்தையும் பயன்னடுத்துவார்கள்.

கிறீஸ்துவின் உறுப்புக்கள் என்ற முறையில் குழும வாழ்வு என்பதும் அர்ப்பணிக்கப்பட்டோரின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து ஒருவரையொருவர் மதித்து பிறரின் சுமைகளை தாங்கி அன்புறவில் வாழ வேண்டியவர்கள். இத்தகைய சமூகம் ஆண்டவர் பெயரால் குழுமியுள்ள ஒரு இறைபிரசன்னம் நிரம்பியுள்ள குடும்பமாகும்.

திருவழிப்பாட்டுக் கொண்டாட்டங்களில் இறைபணியாளர்களினதும், அர்ப்பணிக்கப்பட்டோரினதும் பணி முக்கியமானது. நம்பிக்கை கொண்ட இறைமக்களை இறை வேண்டலில் பக்தியுடனும் உண்மையுடனும் பங்குபற்ற வழிகாட்டுவதுடன் அவர்களுக்கு கற்று கொடுக்கவும் வேண்டும்.

பொது நிலையினரையும் அவரவர் வாழ்க்கை நிலையின் கடைமைகளை சரிவர நிறைவேற்ற வழிநடத்துவதுடன் வளர்ச்சி பெற்றவர்கள் தங்களுக்கு ஏற்றமுறையில் நற்சய்தி அறிவுரைகளை கடைபிடிக்கச்செய்யவும் அவர்களை தூண்ட வேண்டும்.

அர்ப்பணஞ் செய்யப்பட்டவர்கள் பாடல்கள் புகழ்பாக்கள் ஆண்டவருக்கு உளமார இசை பாடவும் இறை தந்தைக்கு கிறீஸ்துவின் பெயரால் எப்போதுமே நன்றி கூறவும் இறைமக்களுக்கு கற்றுக் கொடுக்கின்றார்கள். இன்னும் இறைபணியாளர்கள் திருப்புகழ் மாலையை வேண்டுவதன் மூலம் தங்கள் சொந்த மக்களுக்காகவும் அனைத்துலக மக்களிற்காகவும் திருச்சபையின் பெயரால் இறைவனிடம் நிதமும் மன்றாடுகின்றார்கள்.

இறை பணியாளர்களாக இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் இயேசுவின் முன்மாதிரியை பின்பற்றி எல்லோருடனும் சிறந்த மனிதப் பண்பு உடையவர்களாக பழக வேண்டும். மனித விருப்பு வெறுப்புக்களுக்கல்ல கிறீஸ்தவ கோட்பாடுகளையும், வாழ்க்கை முறைகளையும் ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப இவர்கள் வாழ சிறப்பாக அழைக்கப்பட்டவர்கள்.

உண்மைக்கு சான்றுபகர்வதிலும், நீதிக்காக பணிபுரிவதிலும் மனம் சோராது, ஒருவரொருவருக்கு உதவி செய்வதிலும் இவர்கள் ஆர்வமுடன் உழைப்பவர்கள் அர்ப்பணம் செய்யப்பட்டவர்கள் திருத்தூது, அன்பு, சகோதரத்துவம், பணிவு என்னும் சிறந்த பண்புகளால் பிணைக்கப்பட்டு மற்ற பணியாளர்களுடன் இணைந்து பணிபுரிபவர்கள் இறை பணிக்காக நற்செயல்களில் தம்மை ஈடுபடுத்துவதுடன் தமது பொருட்களையும் பொதுவாக பிறருடன் பகிர்ந்து கொள்வார்கள்.

இறைபணியாளர்கள் எந்த வேளையிலும் தம்மை அர்ப்பணிக்கவும், சேவையில் ஈடுபடுத்தவும் ஆயத்தமாக இருப்பார்கள். இறைமக்களுக்கு விருப்பமுடன் செவிமடுத்து, அவர்களின் விருப்பங்களை சகோதர பாசத்துடன் கவனிக்க வேண்டும். (உரோ 12:10) உடன் பிறப்புக்கள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் தங்களைவிட மதிப்புக் குரியவரென எண்ணும்படி எல்லோரையும் அன்பின் பிணைப்பால் இணைத்து அழைத்துச் செல்வது ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட இறைபணியாளரின் பாரிய பொறுப்பாகும்.

இந்த வருடத்திலே இறை பணியாளர்களும் இறைவனுக்காக தம்மை அர்ப்பணஞ் செய்தவர்களும் மீளவும் தமது அழைப்பை மீளாய்வு செய்து, புதுப்பிக்கப்பட திருத் தந்தையினாலும் திருச்சபையினாலும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே திருப்பணியாளர்கள் அனைவரும் உண்மையான பாஸ்கா மகிழ்ச்சி பொங்கி வழியும் வாழ்வின் சான்றால் இறைமக்களை இறைவன்பால் ஈர்த்துச் செல்ல புதுப்பிறப்படைவோம்.

**அருட்சகோதரி: றோமலா அன்ரனி**
**(H.C)**

**வாசகர்களே!**

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**ஆசிரியர்**
**திருமலைத் தீபம்**
**297, டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை மாதம் - 2015
## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 05
## தூய மத்தேயு நற்செய்தி 16 - 20

**அன்பார்ந்த வாசகர்களே**

“விடுபட்ட எழுத்துப்புதிர்” போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.
1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு150/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 05. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**
**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 01. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொ | ■ | உ | | ■ | தா | | | | ■ |
| | ம | ■ | ஐ | | ■ | வி | ■ | | போ |
| | | சி | ■ | க | | | த | ■ | ■ |
| | | | இ | | | | | | |
| | | | | | | ■ | | | |
| | | | | | | ■ | | | |
| ■ | ■ | | | ■ | | தா | ■ | | |
| பெ | | | | த | | | ஏ | | |
| | | | ■ | | வி | ■ | | ப | |
| | பே | | ■ | சொ | | | | ■ | ம |

1. உ...... பெ....ர் பே.....ரு 2. ஐ...... என் மக......க்கு இ....ங்கும் 3. சி..... பிள்.......களைப் போ.......
4. பத்......யிரம் தா.....ந்து 5. க.....வன் தன் தா...... தந்.....யை 6. பொ.....ச் சா......று சொ.....லா...... 7. மர...... தண்ட....... வி.....ப்பா.....கள்.

**பெயர்** .......................................................
**முகவரி** .......................................................
**பங்கு** .......................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 03
## தூய மத்தேயு நற்செய்தி 11 - 15
## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ள் | ள | த் | தி | ன் | ■ | ம | க | னே |
| ■ | வா | ய் | ■ | எ | ஞ் | சி | ய | ■ | இ |
| நி | ■ | பெ | று | கி | ன் | ற | ன | ர் | து |
| றை | பா | ■ | ப | கை | வ | னு | டை | ய | ■ |
| வை | ர் | ம் | யு | கை | ழு | அ | ■ | ம் | ப் |
| யே | வை | ■ | வே | லை | உ | ம | து | கு | ளை |
| ■ | பா | ர் | வை | ய | ற் | றோ | ர் | க் | க |
| தா | வீ | தி | ன் | ■ | பே | சு | ம் | ரு | டு |
| ந | ம் | பி | க் | கை | து | ரி | பெ | இ | ண் |
| ம் | பு | ப் | ய் | லா | க | ங் | அ | ■ | து |

01. பார்வையற்றோர் 02. பார்வை 03. பெறுகின்றனர்
04. உள்ளத்தின் 05. நிறைவையே 06. வாய் 07. பேசும்
08. இது 09. பகைவனுடைய 10. வேலை
11. அழுகையும் 12. அங்கலாய்ப்பும் 13. இருக்கும்
14. எஞ்சிய 15. துண்டுகளைப் 16. ஐயா 17. தாவீதின்
18. மகனே 19. உமது 20. நம்பிக்கை பெரிது

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும்,நன்றிகளும்.**
விடைகள் அனுப்பியோர் - 42
சரியானவிடை எழுதியவர்கள் -24

**பரிசுக்குரியவர்கள் :**

**1ம் பரிசு 500/=**
செல்வி A.கிறிஸ்டி றோஷினி
இல 11/11 சென்ட யூட்ஸ் லேன்
பாலையூற்று



**2ம் பரிசு 300/=**
செல்வி . ஞா.சரோமி
3ம் வட்டாரம்
நிலாவெளி

**3ம் பரிசு 150/=**
செல்வி ஆன்வஜீ பிறிமன்
21/3 வித்தியாலயம் வீதி
திருகோணமலை

☆ D. சனோஜ் அன்ரனி - உவர்மலை
☆ D. நிதிஸ்வரி - உவர்மலை
☆ தே. சமில்டன் - நிலாவெளி
☆ யோ. தேவலோஜினி - நிலாவெளி
☆ ப.கீர்த்திகா- இலிங்கநகர்
☆ யோ.புளோரிடா -இலிங்கநகர்
☆ V. சத்தியவாசகன் - இறை இரக்கத் திருத்தலம்
☆ R. டிலுக்ஸ்ராஜ் - செல்வநாயகபுரம்
☆ தே. லக்ஷிகா - கும்புறுபிட்டி
☆ அருள் நிசாந்தன் - நிலாவெளி
☆ அ. கரோலினி கீர்த்திகா- பேராலயம்
☆ ச. அஜித்கரன் - மூதூர்
☆ நே. என்சியா - கும்புறுபிட்டி
☆ வெ. ஆன்டிலக்ஷிகா - கும்புறுபிட்டி
☆ K. சுஜாதா - நிலாவெளி
☆ ச.பே வோஹுன் பிள்ளை - உவர்மலை
☆ யோ. அருஷியா - அன்புவழிபுரம்
☆ நே. தனுஜா- கும்புறுபிட்டி
☆ E.எ.லினாசிஜேனி - நிலாவெளி
☆ பியூலா டானியா - பேராலயம்
☆ A. டனுஷன் - நிலாவெளி

### ஹாய் குட்டிஸ்
### திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 12
### எண்ணிக்கை நூல் 1~12 வரை அதிகாரங்கள்

01. ஆரோனின் புதல்வர்களில் கொல்லப்பட்டவர்கள் பெயர்கள் யாவை?
விடை:.......................................................
02. மோசே எந்த இடத்தில் மக்கள் கணக்கெடுப்புச் செய்தார்?
விடை:.......................................................
03. பத்துக்கலம் என்பதன் எபிரேயப் பாட்டம் என்ன?
விடை:.......................................................
04. 11/2கிலோகிராம் என்பது எத்தனை செக்கேல்?
விடை:.......................................................
05. புனிதப் பொருள் மூடப்படும் போது யார் உள்ளே சென்று பார்க்கக்கூடாது?
விடை:.......................................................
06. கிப்ரோத்து அத்தாலா என்பதன் பொருள் என்ன?
விடை:.......................................................
07. இஸ்ரயேலில் போருக்குப் போகத் தக்கவர்களாக எண்ணப்பட்ட மக்களின் எண்ணிக்கை எத்தனை? (இலக்கத்தில் எழுதுக)
விடை.......................................................
08. பாளையத்துக்கு புறம்பாக்குமாறு குறிக்கப்பட்ட மக்களில் ஒரு குழுவைக் குறிப்பிடுக?
விடை:.......................................................
09. மிரியம் மோசேக்கு எதிராகப் பேசியதன் விளைவு என்ன?
விடை:.......................................................
10. மோசே மீட்புப் பணத்தை யாருக்குக் கொடுத்தார்?
விடை:.......................................................

**பெயர்** .......................................................
**முகவரி** .......................................................
**பங்கு** .......................................................

### ஹாய் குட்டிஸ்
### திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 10
### லேவியர் அதிகாரம் 14 ~ 27 விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | சாகாது இருக்க | (16:02) |
| 02. | அதுவே உயிர் | (17:14) |
| 03. | விடியும்வரை | (19:13) |
| 04. | உடல் ஊனமுற்றவன் | (21:17) |
| 05. | பசு அதன் கன்று, ஆடு அதன் குட்டி | (22:28) |
| 06. | ஆண்டவருக்கான பாஸ்கா | (23:5) |
| 07. | சபிக்காதே இடறச் செய்யாதே | (19:14) |
| 08. | 100பேர் பதினாயிரம் | (26:08) |
| 09. | ஆண்டவரின் கூடாரப் பெருவிழா | (23:34) |
| 10. | யாக்கோபு, ஈசாக், ஆபிரகாம் | (26:42) |
| 11. | கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் | (20:27) |
| 12. | மனமுவந்து | (19:05) |
| 13. | கொலை செய்யப்படுவார், விலங்குக்கு விலங்கு | (24:17) |
| 14. | ஓய்வு நாளை | (26:02) |
| 15. | 4 ஆண்டவருக்கான பாஸ்கா, அறுவடை, புத்தாண்டு, கூடாரம் | (23:05,15,23,33) |

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும். பங்குபற்றியவர்கள் - 29 பேர் சரியான விடையளித்தோர் ஒருவரும் இல்லை**

**குறிப்பு: இரண்டு போட்டிக்குரிய** பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.


**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 01. 2015**

## மறைக்கல்வி கற்போம் ~ 04

01. தூய கன்னி மரியாள் இறைவனின் அன்னை என கொண்டாடப்படும் பெருவிழா எப்போது?
**ஜனவரி 01 (கடன்திருநாள்)**
02. ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா எப்போது?
**கிறிஸ்து பிறப்பை அடுத்துவரும் இரண்டாம் ஞாயிறு**
03. இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் அருளாளர் ஜோசப்வாஸ்சின் விழா எப்போது?
**ஜனவரி 16ம் திகதி**
04. மரியாள் கடவுளின் தாய் என்று அறிவித்த சங்கம் எது? எப்போது?
**எபேசு சங்கம் கி.பி 431ம் ஆண்டு**
05. திருச்சபை என்றால் என்ன?
**வெளிப்படையாகவே கிறிஸ்துவை ஏற்று அவரது அடிச் சுவடுகளைப் பின்பற்றி வாழும் விசுவாசிகளின் கூட்டமே**
06. திருச்சபை எத்தனை வகைப்படும்?
**வெற்றிவாகை சூடும் திருச்சபை**
**பயணம் செய்யும் திருச்சபை**
**துன்புறும் திருச்சபை**
07. திருச்சபையின் அடையாளங்கள் எவை?
**ஏகம் (ஒருமை)**
**பரிசுத்தம் (தூய்மை)**
**கத்தோலிக்கம் (அகில உலகம்)**
**அப்போஸ்தலிக்கம் (அப்போஸ்தலர் வழி)**
08. கத்தோலிக்கம் என்றால் என்ன?
**உலகளாவியது, எல்லா காலத்திற்கும் உரியது, எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்ற பொருள்.**
09. திருச்சபையின் முப் பணிகள்?
**போதிக்கும் பணி**
**புனிதப்படுத்தும் பணி**
**வழிநடத்தும் பணி**
10. திருச்சபையில் எத்தனை குருத்துவப் பணிகள் உள்ளன?
**பொதுக் குருத்துவப் பணி**
**பணிக் குருத்துவப் பணி**
11. ஆயர் என்பவர்கள் யார்?
**அப்போஸ்தலர்களின் வழி வந்தவர்கள்**
12. திருச்சபையின் உருவகங்கள் எவை?
**ஆட்டு மந்தை, ஆட்டுக் கொட்டில், இறைவனின் விளை நிலம், கடவுளின் கட்டிடம்,ஒரு மணமகள், கிறிஸ்துவின் மறையுடல்**
13. 2015ம் ஆண்டு திருகோணமலை மறைமாவட்டம் என்ன ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது?
**தூய ஜோசப்வாஸ்அடிகளாரின் ஒளியில் புதியமுறை நற்செய்தி அறிவிப்பு**
14. ஏழைக் குழந்தைகளைப் பராமரிக்கும் தூய ஜோன்பொஸ்கோவின் நாள் எப்போது?
**ஜனவரி 31**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருகைக் கால ஆராதனை 06.12.2014 அன்று அலஸ்தோட்டம் இறை இரக்கத் திருத்தலத்தில் நடைபெற்றது.


அருட்பணியாளர்கள் B.ரொபின்சன் போல், R.திருச்செல்வம், S.மதுராங்கன்குரூஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்

## பாராட்டுக்கள்



திருகோணமலை மாவட்ட எகெட் கரித்தாஸ் நிறுவனத்தில் பணிபுரியும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.ஞானபிரகாசம் அன்டனி பிரான்சிஸ் அவர்கள் தேசியமட்டத்தில் ஆங்கிலக் கல்வி அறிவிற்கான விசேட விருதினை மகரகமையில் உள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் பிரித்தானிய மன்ற பணிப்பாளரினால் பெற்றுக்கொண்டார். இதனால் எமது எகெட் கரித்தாஸ் நிறுவனத்திற்கு பெருமை தேடித்தந்த இவரை பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றனர்.

## இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் ஆயரின் பிறந்ததின கௌரவிப்பு 08. 12.2014




## 41ம் நாள் நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் உயிர் வாழ்வான்"

மலர்வு
1947
†
08
†
02



உதிர்வு
2014
†
11
†
24

### திருச்செல்வம் அருளானந்தம் மரியதாஸ்

அன்பின் இருப்பிடமே பாசத்தின் உறைவிடமே
எம்மை விட்டுப்பிரிந்த நாட்கள் நாற்பத் தொன்றாயினும்
இன்னும் எம் மனங்களில் இது ஒரு கனவா அல்ல
நனவா என எண்ணத் தோன்றுகின்றது
மாதமென்ன ஆண்டுகளென்ன சென்றாலும்
உம் அன்பு எம்மை விட்டுப் பிரியாது
உம் ஆத்மா இறைவனில் சாந்தியடையட்டும்.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார்
உறவினர், நண்பர்கள்.

தகவல்: திருமதி ஒகஸ்டா
3ம் வட்டாரம்
நிலாவெளி

## சென்யோன் அம்பியுலன்ஸ்




## உவர்மலை (இலிங்கநகர்) பங்குத் தந்தையின் குருத்துவ நினைவும் பிறந்தநாள் நிகழ்வும்



## தூய குவாடலூப் ஆலயத்தில் 2014ம் ஆண்டுக்கான மறைக்கல்வி மாணவர்களின் ஒளிவிழா போட்டிகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org